# TAMIL NADU
# GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.12A CHENNAI WEDNESDAY, MARCH 30,2011**

**Panguni 16, Thiruvalluvar Aandu-2042**


## Part VI --- Section 2

(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ SC / 7– 23, 14–03–2011 நாளிட்டது**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு விதித்தொகுப்பைக் குறித்துரைத்துள்ளது என்பதாலும் மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு ஒருசில திருத்தம் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தம் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன்பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைத்துள்ளது, அதாவது : –

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(அ) இந்த விதித்தொகுப்பு, 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(ஆ) இது, தமிழ்நாடு அரசிதழில், அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித்தொகுப்பின் 27ஆம் கூறின் திருத்தம் :**

(அ) முதன்மை ஒழுங்குமுறை விதியில், 27ஆம் கூறின், (1)ஆம் உட்கூறில் (d) இனத்திற்குப் பதிலாக பின்வரும் இனம் அமைக்கப்படுதல் வேண்டும் : –

*“மின் பகிர்மான உரிமம்தாரரின் தலைமைப் பொறியாளர் படிநிலைக்கு குறையாத மூன்று பிரதிநிதிகள் ”*

(ஆ) முதன்மை ஒழுங்குமுறை விதியில், 27ஆம் கூறின், (1)ஆம் உட்கூறில் (f) இனத்திற்குப் பதிலாக பின்வரும் இனம் அமைக்கப்படுதல் வேண்டும் : –

*“வீட்டு உபயோக நுகர்வோர் பிரிவிலிருந்து இரண்டு பிரதிநிதிகள், தாழ்வழுத்த தொழிற் பிரிவிலிருந்து ஒருவர் மற்றும் வேளாண் நுகர்வோர் பிரிவிலிருந்து ஒருவர். ”*

( தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**(ரா.வெ. ராஜா)**
செயலாளர்